# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 144/2025 நாள்.09.03.2026

### PW1- திரு. ஆபிரகாம், த/பெ. திரு.ராயப்பன்

2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9வது படித்துள்ளேன். தஞ்சாவூர் நிர்மலா நகரில் வசிக்கிறேன் என்றால் ஆமாம். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ஐஸ்வர்யா கவரிங் என்ற கடை திருவையாறில் நடத்தி வருகிறேன். கிரைய ஒப்பந்தம் முதுகுளத்தில் எழுதபட்டது என்றால் இல்லை எனது கடையில் வைத்து எழுதபட்டது. கிரைய ஒப்பந்தம் எத்தனை லட்சத்திற்கு என்றால் 55லட்சம். 5லட்சம் முன்பணம் கொடுத்தேன் என்றால் ஆமாம். பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் என்றால் ஆமாம். ஒப்பந்தத்தில் சொல்லபட்டுள்ள இடம் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ளது என்றால் ஆமாம். அந்த இடத்தை நான் பார்த்தபோது எனக்கு பிடித்தது என்றால் ஆமாம். பார்த்துவிட்டு வந்துதான் ஒப்பந்தம் போட்டேன் என்றால் ஆமாம். ஒரு ஒப்பந்தம் 100ரூபாய்க்கு மேல் தயாரானால் கட்டாயம் பதிவு செய்யவேண்டும் என்றால் சரியல்ல. புல எண் 28/1பி பிளாட் எண் 202 என்றால் ஆமாம். 1, 2 பிரதிவாதிகள் செட்டில்மெண்ட் மூலம் சொத்தை பெற்றார்கள் என்றால் தெரியாது. ஆவணம் பார்த்துவிட்டுதான் சொத்தை பார்க்கபோனேன் என்றால் இல்லை. கிரைய ஒப்பந்த தேதி 28.1.2013 என்றால் ஆமாம். மேற்கண்ட ஒப்பந்தம் எனக்கும் 3ஆம் பிரதிவாதிக்கும் ஏற்பட்டது என்றால் ஆமாம். எனக்கும் 3ஆம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் வில்லங்கம் தவிர உறவுமுறை தொடர்பாக பிரச்சனை வந்தால் 3ஆம் பிரதிவாதி தீர்த்து வைப்பதாக சொன்னார் என்றால் நான் பார்க்கவில்லை நண்பர்தான் பார்த்தார். 2ஆம் பிரதிவாதிக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் ஆமாம். வழக்கை 12 வருடம் கழித்து காலாவதி தோசத்துடன் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. ஒருவேலை கிரையம் ஆகவில்லை என்றால் வட்டியுடன் கொடுக்கவேண்டும் என்று ஒப்பந்தத்தில் இல்லை என்றால் ஆமாம். 3ஆம் பிரதிவாதி கிரையம் செய்ய தயாராக இருந்தார் என்றும் என் பணம் தயார் செய்யமுடியாததால் நான் கிரையம் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் 3வது பக்கத்தில் புல எண் 20/1எ ஐ பலபகுதிகளாக பிரித்து 4பேரிடம் விற்றுவிட்டதாக சொல்லுகிறேனே அவர்கள் அனுபவம் செய்வதாக சொல்லுகிறேனே அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் மேலே சொன்ன முதுகுளம் புதுகோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தாலுக்காவில் வரும் என்றும் ஆகையால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியாது என்றும்

அதற்காகவே திருவையாறு என் கடையில் வைத்து ஒப்பந்தம் ஏற்பட்டது பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. ஒப்பந்தத்தில் 1வது சாட்சியாக முதுகுளத்தை சேர்ந்த ராமையன் என்பவர் சாட்சி கையெழுத்துபோட்டுள்ளார் என்றால் ஆமாம். பொய்யான காரணங்களை சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மதமில்லை என்றால் சரியல்ல.

<u>3ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3ஆம் பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் குணசேகரன் என்பவர் மூலம் தெரியும். குணசேகரன் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் திருசோற்றுத்துறை. அவர் எனது நண்பர் என்றால் ஆமாம். ராமையன் என்பவர் யார் என்றால் எனக்கு தெரியாது முகமதுஅலிக்கு நண்பர். ராமையன் என்பவர் முதுகுளம் புதுகோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தாலுக்காவை சார்ந்தவர் என்றால் ஆமாம். பணம் எங்கு வைத்து கொடுக்கபட்டது, ஒப்பந்தம் எங்கு ஏற்பட்டது என்றால் ஐஸ்வர்யா கவரிங் திருவையாறில் வைத்து நடைபெற்றது. பணம் கொடுப்பதற்கு சாட்சிகளை நான் அழைத்து வந்தேனா என்றால் இல்லை. யார் அழைத்து வந்தார் என்றால் தெரியவில்லை. ராமையன் சாட்சி கையெழுத்து போட்டது தெரியுமா என்றால் தெரியும். சாட்சி கையெழுத்துபோடுவதற்கு முன்பு அவரை பற்றி விசாரித்தேனா என்றால் இல்லை. ஒப்பந்தமே முதுகுளத்தில் ஏற்பட்டது என்றும், அதனால்தான் முதுகுளத்தை சேர்ந்த ராமையன் 1வது சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார் என்றும், ஆகவே இந்த வழக்கு புதுகோட்டை மாவட்டத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு சொந்த ஊர் எது என்றால் ஜெயம்கொண்டம் தாலுக்கா டீபழுர். தாவா சொத்து சென்னையில் உள்ளது என்றால் ஆமாம். இடம் வாங்குவதற்கு ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. EC மட்டும் பார்த்தேன். 3ஆம் பிரதிவாதி முகமதுஅலிக்கு இடத்தை எழுதி கொடுப்பதற்கு அதிகாரம் உள்ளதா என்று ஆவணம் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. ஒரு சொத்தை நல்லெண்ணத்தின்பால் கிரையம் பெறுபவர் ஆவணத்தை பரிசிலீத்து வாங்குவது வழக்கம் என்றால் எனக்கு தெரியாது. வழக்கில் பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் அசல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த ஒப்பந்தத்தில் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட 28.1.2013 லிருந்து 3 மாத காலகெடுவிற்குள் மீத கிரைய தொகை 50 லட்சத்தை கொடுத்துவிட்டு கிரையம் பெறவேண்டும் என்று வாசகம் உள்ளது என்றால் ஆமாம். அவ்வாறு கிரையத்தை பூர்த்தி செய்து கொடுக்கவேண்டும் என்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு

கொடுத்தேனா என்றால் இல்லை. அவ்வாறு முயற்சி எடுக்காததால் தாவா காலாவதி தோசத்தால் பாதிக்கபட்டது என்றால் சரியல்ல. காலாவதி தோசம் ஆகிவிட்டதால் பணத்தையும் திரும்ப கேட்க முடியாது என்றும், அதைபோல் வட்டியும் கேட்கமுடியாது என்றும் கிரையமும் திரும்பகேட்க முடியாது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.09 18:53:21 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.